தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
<u>கடித எண்.45271/இசட்.1/2009–3 நாள் 25.1.2010</u>

அனுப்புநர்
திரு. வி. கு. சுப்புராஜ், ஐ.ஏ.எஸ்.,
அரசு முதன்மைச் செயலாளர்,

பெறுநர்
மருத்துவ கல்வி இயக்ககம், சென்னை – 10.

அய்யா,

பொருள்: உடல் தானம் – இறப்புக்குப்பின் மருத்துவ கல்வி மாணவர்களின் கல்வி நோக்கங்களுக்காக உடல் தானம் அளிக்க முன்வருபவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் நிர்ணயிக்கப்பட்டது – நடைமுறை சிக்கல் தொடர்பான பத்திரிக்கை செய்தி – நடைமுறையில் சில திருத்தங்கள்.

பார்வை: 1 30.6.08 மற்றும் 8.8.08 நாளிட்ட அரசு கடித எண்.47824/இசட்.1/07–4 ¢ 5.
2 10.10.09 நாளிட்ட தினமணி நாளிதழில் வெளியான செய்தி.

-------

இறப்புக்குப் பின் உடல் தானம் செய்ய விரும்புவோர் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் நிர்ணயிக்கப்பட்டு, அதற்கான மாதிரி படிவங்கள் மற்றும் வழிகாட்டி குறிப்புகள் ஒப்பளிக்கப்பட்டு பார்வையில் காணும் அரசு கடிதங்களில் தங்களுக்கு அனுப்பப்பட்டது.

2. உடல் தானம் வழங்க முன்வருபவர் அதனை பதிவு செய்ய வகுக்கப்பட்ட வழிமுறைகளில் ஒன்றாக வாரிசு சான்று பெற்று வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உடல் தானம் செய்பவரின் மறைவுக்குப் பின் அவரது வாரிசுகளால் சட்டச் சிக்கல்கள் ஏதும் நேரக்கூடாது என்பதற்காகவே இத்தகைய சான்றும், மேலும் வாரிசுகள், தானம் அளிப்பவரின் உடலை தானமாக அளிக்க மறுப்பு தெரிவிக்க மாட்டார்கள் என்று உடல் தானம் அளிப்பவரின் வாரிசுகளால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றும், உடல் தானத்தை பதிவு செய்யும் முன் அளிக்கப்படவேண்டும் என வகுக்கப்பட்டுள்ளது. ஆனால் உயிருடன் இருப்பவரின் மகன், மகள் ஆகியோருக்கு வாரிசுச் சான்று வழங்க வேண்டும் என்று வருவாய்த்துறை விதிகளில் குறிப்பிடப்படாததால் அதை வழங்க முடியாது என்று வட்டாட்சியர் அலுவலக அதிகாரிகள் கூறுவதாக நாளிதழ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. உடல்தானம் செய்வதற்கான நடைமுறைகளை எளிதாக்கும் பொருட்டு உடல்தானம் அளிக்க முன்வருபவர், அதனை பதிவு செய்வதற்கு அளிக்க வேண்டும் என பார்வையிலுள்ள அரசு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் பட்டியலிருந்து தானம் அளிப்பவரின் வாரிசுசான்று மற்றும் வாரிசுதாரரிடமிருந்து முன்னவரின் உடலை தானமளிக்க மறுப்பின்மை கடிதம் ஆகியவை நீக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளப்பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக